ஆண்டாள் நெசவாளர் சங்கம், திருவில்லிபுத்தூர்

*வினா எண். 726—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருவில்லிப்புத்தூர் 268 ஆண்டாள் நெசவாளர் சங்கத்தில் வசூல் செய்யப்பட்ட சம பங்கு சிக்கன நிதியை உறுப்பினர்களுக்கு திரும்பக் கொடுப்பதில் ஏன் காலதாமதம் ஏற்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : கூட்டுறவு மத்திய வங்கிகளில் செலுத்தப்பட்ட சமபங்கு சிக்கன நிதியை உடனடியாகத் திருப்பி கொடுப்பதாயிருந்தால் அவற்றின் நிதி நிலை பாதிக்கப்படும். இப்பிரச்சினைக்கு முடிவு காண்பது பற்றி அரசு ஆய்வு செய்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சமபங்கு சிக்கன நிதித் திட்டத்தை அரசு கைவிட்டுவிட்டதா? அதற்குப் பதிலாக சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் வைக்கப்பட்டுள்ளதா? அதில் இந்த சமபங்கு சிக்கன நிதி சேர்த்து வைக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் சேராத நெசவாளர்களுக்கு இந்த சமபங்கு சிக்கன நிதியை திருப்பிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல சமபங்கு சிக்கன நிதியை அடியோடு விட்டுவிடவில்லை. 1962-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிதி 1975 நவம்பர் வரை இருந்தது. அந்த சம பங்கு சிக்கன நிதியை சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தோடு இணைத்திருப்பதால் அதன் அடிப்படையில் இறந்துபோனவர் குடும்பத்திற்கு முன்னால் 500 ரூபாய் கொடுக்கப்பட்டது. இப்போது 3000 ரூபாயாகக் கொடுக்கப்படுகிறது. இதில் சேராத நபர்களுக்கு ஏறத்தாழ 82 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. இதை ஒட்டுமொத்தமாக வங்கியிலிருந்து எடுத்து வழங்கினால் அந்த வங்கி நிதி நெருக்கடியால் பாதிக்கப்படும் என்பதால் இந்த அரசு நிதித்துறையை கலந்துபேசி, விரைவில் முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-40]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்கள் இறந்தால் சேமநலநிதியிலிருந்து 3000 ரூபாய் கொடுப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால் இந்தக் காலத்தில் 3000 ரூபாய் என்பது 30 ரூபாய் மாதிரி இருக்கின்றது. ஆகவே 10,000 ரூபாய் சேமநலநிதியிலிருந்து கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, 1962-லே ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்

தின் மூலம் 1980—வரை 500 ரூபாய் மட்டுமே கொடுக்கப்பட்டு வந்தது. கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தொகையினை 3000 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தி இருக்கிறார்கள். ஆனால் இப்போதுள்ள விலைவாசிப் படி இந்தப் பணம் காணாது என்று சொல்கிறார் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். இதை மனதிலே கொண்டு அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு சங்கத்திலே சேர்ந்தவர்கள் இறந்துவிட்டால் 500 ரூபாய்க்கு பதிலாக 3000 ரூபாய் கொடுப்பதாகச் சென்ற பட்ஜெட் டின்போது அறிவித்தார்கள். ஆனால் அந்தத் தொகையினை வழங்குவதற்கு இன்னும் அரசு உத்தரவு வரவில்லை என்று சொல்லி குடியாத்தத்திலே உள்ள ஒரு கூட்டுறவு சங்கத்திலே இறந்துவிட்ட ஒருவருக்கு 500 ரூபாய்தான் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இது குறித்து அமைச்சருக்கு எழுதி இருப்பதாக வும் சொன்னார்கள். இது அமைச்சரின் கவனத்திற்கு வந்ததா? அரசு நடவடிக்கை எடுத்ததா?

மாண்புமிகு எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் 1—3—1980-லிருந்து நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு இருக்கின்றது. இதிலே கையெழுத்து ஆகி நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆனால் இதுசம்பந்தமாக ஏதாவது புகார் இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாக அது நிவர்த்தி செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை மாவட்டம்-வாதம்சேரியிலுள்ள
நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண் 727. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் திரு ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கைத்தறி கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம் வாதம்சேரியிலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஒன்றில் சுமார் 55 ஆயிரம் ரூபாய் கையாடல் நடைபெற்றுள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்

(அ) ஆம்.

(ஆ) மேற்படி சங்கத்தின் நிதியிலிருந்து ரூ. 54,953.60 கையாடல் செய்யப்பட்டது. கோவை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை நடந்து வருகிறது.